**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகை

# ரூ.1,000 பெற விண்ணப்ப பதிவு

- **தருமபுரியில் முகாமை தொடங்கி வைத்த முதல்வர் ஸ்டாலின், தகுதிவாய்ந்த பயனாளிகள் யாரும் விடுபட மாட்டார்கள் என்று உறுதிபட தெரிவித்தார்.**



↑ தருமபுரி மாவட்டம் தொப்பூரில் மகளிர் உரிமை தொகை திட்டத்துக்கு விண்ணப்பம் பதிவேற்றம் செய்யும் முகாமை முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்து, பயோமெட்ரிக் பதிவை பார்வையிட்டார். உடன், அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கே.என்.நேரு, முதல்வரின் செயலர் நா.முருகானந்தம், மாவட்ட ஆட்சியர் சாந்தி.

**● தருமபுரி**

கலைஞர் மகளிர் உரிமை தொகை ரூ.1,000 பெறுவதற்கான விண்ணப்ப பதிவை தருமபுரி மாவட்டம் தொப்பூரில் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தகுதி வாய்ந்த பயனாளிகள் யாரும் விடுபடாத வகையில் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்படும். இத்திட்டத்தால் பெண்கள் சுயமரியாதையும், பொருளாதார விடுதலையும் அடைவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்ட விண்ணப்பங்களை பதிவேற்றும் முகாம் தொடக்க விழா தருமபுரி மாவட்டம் தொப்பூரில் நேற்று நடந்தது. தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமில் பங்கேற்ற முதல்வர் ஸ்டாலின், விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யும் பணியை தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, விண்ணப்பங்களை பயோமெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளைபார்வையிட்டு ஆய்வுசெய்தார். விண்ணப்ப பதிவுக்காக வந்திருந்த பெண்களுடன் கலந்துரையாடினார்.

விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

முதல்வராக நான் பதவியேற்ற உடன், அரசு நகரப் பேருந்துகளில் மகளிர் இலவசமாக பயணம் செய்யும் திட்டத்துக்கு முதல் கையெழுத்திட்டேன். இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் இதுவரை 283 கோடி முறை பெண்கள் இலவச பயணம் மேற்கொண்டுள்ளனர். திட்டத்தை நிறைவேற்றும்போது அரசுக்கு கடும் நிதி நெருக்கடி இருந்தது. ஆனாலும், மகளிர் பயன்பெற வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தை மட்டுமே பிரதானமாக கொண்டு செயல்படுத்தினோம்.

**சுயமரியாதையுடன் வாழலாம்**

மகளிர் உரிமை தொகை திட்டத்தையும் அப்போதே செயல்படுத்தி இருக்க வேண்டும். நிதி சூழலால் தற்போதுதான் இது பயன்பாட்டுக்கு வருகிறது. பெண்கள் சுயமரியாதையுடன் வாழவும், பொருளாதாரத்தில் மேம்படவும் உதவும் இந்த திட்டத்தை சிலரால் பொறுத்துக் கொள்ள முடியாமல் தொடர்ந்து விமர்சனம் செய்து வருகின்றனர். கொச்சைப்படுத்தி பிரச்சாரமும் செய்கின்றனர். அதுபற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவிகள் உயர்கல்விக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம் மூலம் கல்லூரி மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் தொடக்கநிலை வகுப்புகளில் படிக்கும் குழந்தைகள் காலை உணவை சரிவர உண்ணாமல் பள்ளிக்கு வருவதால் கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலை இருந்தது. இதை தவிர்க்க, காலை உணவு திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போது 2 லட்சம் குழந்தைகள் பயன் பெற்று வருகின்றனர். விரைவில் அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் இது விரிவுபடுத்தப்பட்டு, ஒரு நாளுக்கு 18 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

**மகளிருக்கு மாபெரும் கொடை**

அதேபோல, மகளிர் உரிமை தொகை திட்டம் வரும் செப்.15-ம் தேதி முதல் பயன்பாட்டுக்கு வரும். இது பெண்களுக்கு திராவிட இயக்கம் வழங்கியுள்ள மற்றொரு மாபெரும் கொடை.

இது பெண்களின் சமூக பொருளாதார நிலையை உயரச் செய்யும் திட்டம் ஆகும். இத்திட்டத்தால் பெண்கள் சுயமரியாதையும், பொருளாதார விடுதலையும் அடைவார்கள். குடும்பத்தின் உயர்வுக்காக கடுமையாக உழைக்கும் பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.7,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

இந்த திட்டத்துக்கான விண்ணப்பங்கள் பதிவேற்றும் முகாம்கள் ஆக.28-ம் தேதி வரை சனி, ஞாயிறு உட்பட அனைத்து நாட்களிலும் செயல்படும். இதற்காக தமிழகம் முழுவதும் 35,929 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை பதிவேற்றும் பணியில் 68,190 தன்னார்வலர்களும், மகளிருக்கு வழிகாட்டுதல் வழங்க 35,925 தன்னார்வலர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**உதவிப் பணம் அல்ல; உரிமைப் பணம்**

இதன்மூலம் மகளிருக்கு தரப்பட இருப்பது உதவிப் பணம் அல்ல. இது மகளிருக்கான உரிமைப் பணம். தகுதி வாய்ந்த பயனாளிகள் யாரும் விடுபடாத வகையில் விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு திட்டம் பயன்பாட்டுக்கு வரும். 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனை சரித்திரம் தொடரும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், கே.என். நேரு, தருமபுரி மக்களவை உறுப்பினர் செந்தில்குமார், எம்எல்ஏக்கள் ஜி.கே. மணி, வெங்கடேஷ்வரன், ராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், முதல்வரின் செயலர் முருகானந்தம், மாவட்ட ஆட்சியர் சாந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# பருவநிலை மாற்றத்தை உலக நாடுகள் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும்

## ஜி20 மாநாட்டில் பிரதமரின் முதன்மை செயலர் பி.கே.மிஸ்ரா வலியுறுத்தல்

**சென்னை**

பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பேரிடர்களை உலக நாடுகள் ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்று ஜி20 மாநாட்டின் பணிக் குழு கூட்டத்தில் பிரதமரின் முதன்மை செயலர் பி.கே.மிஸ்ரா வலியுறுத்தினார்.

உலகளவில் பொருளாதாரத்தில் நிலவும் சிக்கல்களை தீர்ப்பதற்காக ஜி-20 அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட 20 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பின் 2022-23-ம் ஆண்டுக்கான தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது.

இதையடுத்து நாடு முழுவதும் 50 நகரங்களில் பல்வேறு துறைகளின் சார்பில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி கல்வி, நிதி, மகளிர் மேம்பாடு சார்ந்த பணிக் குழு கூட்டம் சென்னையில் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து பேரிடர் அபாயத் தணிப்பு பணிக் குழுவின் இறுதிக் கூட்டம் சென்னையில் நேற்று தொடங்கியது.

தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட பிரதமரின் முதன்மைச் செயலர் பி.கே. மிஸ்ரா பேசியதாவது: உலக அளவில் பருவநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக நிலவி வருகிறது. இதனால் ஏற்பட போகும் பாதிப்புகள் வெகு தொலைவில் இல்லை. உலகில் உள்ள அனைவரையும் இந்த பருவநிலை மாற்றம் பாதிக்கும். எனவே, நாம் அனைவரும் புதிய பேரிடர்களை எதிர்கொள்ள தயாராக வேண்டும். இந்தியாவை பொருத்தவரை பல பேரிடர்களை சந்தித்துள்ளது. குறிப்பாக கிழக்கு, மேற்கு கடலோரப் பகுதிகள் அதிக புயல்களால் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது டெல்லி இதுவரை இல்லாத கனமழையை எதிர்கொண்டுள்ளது.



↑ சென்னையில் நடைபெறும் ஜி20 மாநாட்டின் ஒருபகுதியாக பேரிடர் ஆபத்து குறைப்பு தொடர்பான 3-வது பணிக்குழு கூட்டம் கிண்டியில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற பிரதமரின் முதன்மைச் செயலர் பி.கே.மிஸ்ரா, ஐ.நா. சிறப்பு பிரதிநிதி மமி மிசுடோரி, தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் பிரபாகர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய உறுப்பினர் ஸ்ரீகிருஷ்ண வட்சா உள்ளிட்டோர். படம்: எஸ்.சத்தியசீலன்

இத்தகைய பேரிடர்களை தவிர்க்க தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பேரிடர்களை முன்கூட்டியே கண்டறிந்து பாதிப்புகளை தவிர்க்க உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். மேலும், பேரிடர் மேலாண்மைக்கான நிதி ஒதுக்கீட்டில் அனைத்து நாடுகளும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இந்தியாவில் பேரிடர் கட்டமைப்புகள் மற்றும் செயல்பாடுகளில் பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேரிடர் பாதிப்பை குறைப்பதற்கு தனியார் நிறுவனங்கள் பங்களிப்பும் தேவையாக இருக்கிறது. ஆனால், அதற்கான நிதியை திரட்டுவது சவாலாக இருக்கிறது. அதனால் பேரிடர் மேலாண்மைக்கான தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்கு அரசுகள் செய்ய வேண்டியவை, அவை சிஎஸ்ஆர் நிதியாக மட்டுமின்றி அந்த நிறுவனங்களின் முக்கிய வணிகத்தின் ஒருபகுதியாக இருப்பதை உறுதி செய்ய முடியுமா என்பன போன்ற அம்சங்கள் குறித்து இந்த ஜி20- மாநாட்டில் விவாதிக்க வேண்டியது அவசியமாகும். ஜி20 சார்ந்து இது வரை நாட்டின் பல்வேறு நகரங்களில் 177 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இன்னும் ஒன்றரை மாதங்களில் நடைபெற உள்ள உச்சி மாநாடு ஒரு மைல்கல்லாக அமையும்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஐநா பொதுச் செயலாளரின் சிறப்புப் பிரதிநிதி மமி மிசுடோரி பேசுகையில், "துருக்கியில் நடப்பாண்டு துவக்கத்தில் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. பல்வேறு உயிர்கள் பலியாகின. இந்த நிகழ்வு, பேரிடர் அபாயங்களை குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளை நமக்கு எடுத்துரைக்கிறது. ஐரோப்பாவில் வெப்ப அலைகளாலும், ஆப்பிரிக்காவில் வறட்சியாலும் பலர் இறந்துள்ளனர். பேரிடர்கள் குறித்து முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் அவசியம். இந்த கூட்டம், பேரிடர் கால அபாயங்களை தவிர்க்க தேவையான கொள்கைகளை வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை" என்றார்.

அதன்பின் கூட்டத்தில் துரித முன்னெச்சரிக்கை, பேரிடர்கால நிதி மேம்பாடு, சுற்றுச்சூழல் மேம்பாடு, மீட்பு நடவடிக்கைகள், பேரிடர் கால மீட்புக்கான கட்டமைப்பு ஆகிய 5 முக்கிய அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. அதன் அடிப்படையிலான கருத்துரு அறிக்கைக்கு பணிக்குழு கூட்டத்தின் இறுதி நாளான இன்று (ஜூலை 25) ஒப்புதல் வழங்கப்படும். அந்த அறிக்கையானது ஜி20 நாடுகளுக்கு இடையான தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஜி 20 மாநாட்டின் தலைவர் அமிதாப் காந்த், தமிழக வருவாய் நிர்வாக ஆணையர் பிரபாகர் மற்றும் ஜி 20 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### அமெரிக்காவின் பாதுகாப்பு வளையங்களை தாண்டி சீறிப் பாய்கிறது

# பிரம்மோஸ் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்த முடியவில்லை

## ● உக்ரைன் விமானப் படை வேதனை

**● கீவ் (உக்ரைன்)**

பிரம்மோஸ் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்த முடியவில்லை. அந்த ஏவுகணைகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு வளையங்களைத் தாண்டி துல்லியமாக இலக்கை தாக்குகிறது என்று உக்ரைன் விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவும் ரஷ்யாவும் இணைந்து பிரம்மோஸ் என்ற சூப்பர்சானிக் ஏவுகணைகளை தயாரித்து வருகின்றன. இது ஒலியை விட 5 மடங்கு வேகத்தில் சீறிப் பாயக்கூடியது. இந்த ஏவுகணை இந்தியாவில் பிரம்மோஸ் என்றும் ரஷ்யாவில் 'பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட்' என்றும் அழைக்கப்படுகிறது.

ரஷ்யா - உக்ரைன் இடையே 500 நாட்களுக்கும் மேலாக போர் நீடிக்கும் நிலையில் இரு நாடுகளும் அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தி வருகின்றன.

ரஷ்யாவின் கேஎச்-55, 3எம்-14 காலிபர், ஆர்-27 இசட்ஒய்பி, ஆர்கே- 55 கிரானட், ஆர்எஸ்எம்-56 புலாவா, ஆர்-29 ஆர்எம் ஸ்டில், ஆர்-29 வைசோட்டா, ஓடிஆர்-21 டோக்கா, எஸ்எஸ்-1 ஸ்குட், 3எம்-54 காலிபர் கிளப், ஆர்எஸ்டி-10 பயனீர், 9கே720 இஸ்கந்தர், ஆர்எஸ்-26 ரூபேக், ஆர்எஸ்-28 சர்மட் உள்ளிட்ட பல்வேறு வகையான ஏவுகணைகள் போரில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவுக்கு எதிராகப் போரிட உக்ரைனுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய




நாடுகளும் அதிநவீன ஆயுதங்கள், ஏவுகணைகளை தாராளமாக வழங்கி வருகின்றன. இந்த ஏவுகணைகள் மூலம் ரஷ்யாவின் ஏவுகணைகளை உக்ரைன் ராணுவம் சுட்டு வீழ்த்தி வருகிறது.

ஆனால், ரஷ்யாவின் குறிப்பிட்ட வகை ஏவுகணைகளை மட்டும் சுட்டு வீழ்த்த முடியவில்லை என்று உக்ரைன் விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது ரஷ்யாவின் 'பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட்' ஏவுகணை ஆகும்.

இதுகுறித்து உக்ரைன் விமானப்படை வட்டாரங்கள் கூறியதாவது:

ரஷ்யாவின் காலிபர், இஸ்காந்தர், பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகள் மூலம் ஒடெசா நகரம் மீது கடந்த 20-ம் தேதி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் காலிபர், இஸ்காந்தர் ரக ஏவுகணைகளை வெற்றிகரமாக சுட்டு வீழ்த்திவிட்டோம்.

ஆனால் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளில் ஒரு ஏவுகணையைக்கூட சுட்டு வீழ்த்த முடியவில்லை. இந்த ஏவுகணைகள் மணிக்கு 3,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாய்கின்றன. இலக்கை தாக்கும் போது தரை அல்லது கடல் மட்டத்தில் இருந்து 10 முதல் 15 மீட்டர் உயரத்தில் பறக்கிறது.

அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் அதிநவீன பாதுகாப்பு தடுப்பு சாதனங்கள் எங்களிடம் உள்ளன. ரஷ்ய ஏவுகணைகள் உக்ரைன் எல்லைக்குள் நுழைந்தால் எங்களது தடுப்பு ஏவுகணைகள் தானாகவே சீறிப் பாய்ந்து நடுவானில் எதிரி ஏவுகணைகளை அழித்துவிடும். ஆனால் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்பு வளையங்களை தாண்டிப் பாய்கிறது. இந்த ஏவுகணைகளை சுட்டு வீழ்த்துவது கடினம். இவ்வாறு உக்ரைன் விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரஷ்ய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறும்போது, "ரஷ்ய ராணுவத்திடம் மொத்தம் 470 பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ரக ஏவுகணைகள் இருந்தன. உக்ரைன் போரில் இதுவரை 123 ஏவுகணைகளை பயன்படுத்தி விட்டோம். அதாவது, மொத்த ஏவுகணைகளில் 25 சதவீதத்தை இழந்திருக்கிறோம். இப்போதைய சூழலில் மிக முக்கிய தாக்குதல்களுக்கு மட்டுமே பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளை பயன்படுத்தி வருகிறோம்" என்று தெரிவித்தன.

இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

ரஷ்யாவின் பி-800 ஓனிக்ஸ் யாக்ஹான்ட் ஏவுகணைகளைவிட இந்தியாவில் தயாரிக்கப்படும் பிரம்மோஸ் ஏவுகணைகள் அதிக திறன் கொண்டவை. தற்போதைய பிரம்மோஸ் ஏவுகணைகள் 450 கி.மீ. தொலைவு வரை சீறிப் பாயும் திறன் கொண்டவை.

இந்தியாவிடம் இருந்து பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணைகளை வாங்க பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, தென்ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன. இதில் பிலிப்பைன்ஸ் அரசு ஏற்கெனவே ரூ.3,103 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

பிரம்மோஸ் சூப்பர்சானிக் ஏவுகணைகளைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக 1,500 கி.மீ. தொலைவு பாயும் பிரம்மோஸ் ஹைப்பர்சானிக் ஏவுகணைகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளோம். இதுதொடர்பான ஆராய்ச்சி நடைபெறுகிறது. அடுத்த 5 ஆண்டுகளில் பிரம்மோஸ் ஹைப்பர்சானிக் ஏவுகணையின் உற்பத்தி தொடங்கப்படும். இந்த ஏவுகணை மணிக்கு 9,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாயும். இதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.

இவ்வாறு இந்திய பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### உத்தர பிரதேசத்தின் கியான்வாபி மசூதியில்

# தொல்லியல் துறை ஆய்வு நடத்த தடை

## ● நாளை வரை நிறுத்திவைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

**● வாரணாசி**

வாரணாசி கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறையினர் நேற்று காலை ஆய்வினை தொடங்கினர். இதுதொடர்பான வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், நாளை 26-ம் தேதி வரை ஆய்வு நடத்த இடைக்கால தடை விதித்தது.

உத்தர பிரதேசத்தின் வாரணாசியில் காசி விஸ்வநாதர் கோயிலை ஒட்டி கியான்வாபி மசூதி உள்ளது. மசூதியில் நடத்தப்பட்ட கள ஆய்வில், மசூதியின் ஒசுகானாவின் நடுவே சிவலிங்கம் இருப்பது தெரியவந்தது.

**வீடியோவில் பதிவு**

வாரணாசி மாவட்ட நீதிபதி ஏ.கே. விஸ்வேஷா கடந்த 21-ம் தேதி பிறப்பித்த உத்தரவில், "கியான்வாபி மசூதியில் இந்திய தொல்லியல் துறை அறிவியல்கள ஆய்வு நடத்தி ஆகஸ்ட் 4-க்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டார். அதன்படி தொல்லியல் துறை நிபுணர்கள் நேற்று காலை 7 மணிக்கு கியான்வாபி மசூதியில் ஆய்வினை தொடங்கினர். முதலில் மசூதியின் சுற்றளவு அளவிடப்பட்டது. ஆய்வு பணி முழுவதையும் வீடியோவில் பதிவு செய்ய மசூதியின் 4 புறமும் அதிநவீன கேமராக்கள் பொருத்தப்பட்டன.

இதனிடையே கியான்வாபி மசூதி நிர்வாகம் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று காலை விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா வழக்கை விசாரித்தனர். அப்போது மசூதி நிர்வாகம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஹுபீஷா அகமதி கூறும்போது, "கடந்த 1,500-ம் ஆண்டில் இருந்து மசூதி இருக்கிறது. இப்போது சுமார் 30 பேர் மசூதியை தோண்டி ஆய்வு செய்கின்றனர். இதற்கு தடை விதிக்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார்.

**ரேடார் தொழில்நுட்பம்**

இந்துக்கள் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஷியாம் திவான் கூறும்போது, "வாரணாசி நீதிமன்ற உத்தரவின்பேரிலேயே ஆய்வு நடத்தப்படுகிறது. மசூதியை தோண்டவில்லை. அறிவியல்பூர்வமாக ரேடார் தொழில்நுட்பத்தில் ஆய்வு நடத்தப்பட உள்ளது" என்றார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்டபிறகு தலைமை நீதிபதி அமர்வு பிறப்பித்த உத்தரவில், "ஜூலை 26-ம் தேதி (நாளை) மாலை 5 மணி வரை மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நடத்தக்கூடாது. மசூதி நிர்வாகம் சார்பில் உயர் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை மேல்முறையீடு செய்யலாம். உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

காலை 11.50 மணிக்கு உச்ச நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு உடனடியாக நிறுத்தப்பட்டது.

இதுகுறித்து வாரணாசி மாவட்ட ஆட்சியர் ராஜலிங்கம் கூறும்போது, "உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைப் பின்பற்றி கியான்வாபி மசூதியில் தொல்லியல் துறை ஆய்வு நிறுத்தப்பட்டு உள்ளது" என்று தெரிவித்தார்.

இந்துக்கள் தரப்பு வழக்கறிஞர்கள் கூறும்போது, "தொல்லியல் துறை ஆய்வுக்கு மசூதி நிர்வாகம் ஒத்துழைக்க மறுக்கிறது. உயர் நீதிமன்றத்தில் எங்கள் கருத்துகளை எடுத்துரைப்போம். தொல்லியல் துறை ஆய்வு, வழக்கில் திருப்பு முனையை ஏற்படுத்தும்" என்று தெரிவித்தனர்.



↑ வாரணாசி கியான்வாபி மசூதியில் நேற்று தொல்லியல் துறை ஆய்வு நடத்தப்பட்டது. அப்போது 2,000-க்கும் மேற்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் பணியில் ஈடுபட்டனர். படம்: பிடிஐ

## ஒரே தாழியில் 2 மண்டை ஓடுகள் கண்டெடுப்பு

**தூத்துக்குடி**

தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூர் பரம்பு பகுதியில் 2021 முதல் மத்திய தொல்லியல் துறை சார்பில் அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இங்கு அகழாய்வில் கிடைத்த முதுமக்கள் தாழிகளை திறந்து, அவற்றில் காணப்படும் பொருட்களை ஆவணப்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது. இந்நிலையில், ஒரு முதுமக்கள் தாழியை திறந்தபோது, அதில் 2 மூடிகள் இருந்தன. அவற்றை திறந்து பார்த்தபோது, 2 மண்டை ஓடுகள், முதுகெலும்பு , கை, கால் எலும்புகள் மற்றும் சிறு சிறு பானைகள், இரும்பால் ஆன உளி ஆகியவை இருந்தன. 2 மண்டை ஓடுகள் கணவன், மனைவிக்கு உரியவையா?, அல்லது தாய் மற்றும் குழந்தைக்கு உரியவையா? என்பது தெரியவில்லை. இதுதொடர்பாக மத்திய தொல்லியல் துறை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.